டிரினிடி மகளிர் கல்லூரி (கலை&அறிவியல்)
நாமக்கல் – 637002.
தமிழாய்வுத்துறை
*2023 -2024 ஆம் கல்வியாண்டு(ஒற்றைப்பருவம்)*
*இளங்கலைத் தமிழிலக்கியம் முதலாமாண்டு*

# இக்கால இலக்கியம் ( 23UTA01 )


**வழங்கியவர்**

**இரா.அ.அனிதா**
**உதவிப் பேராசிரியர்**

**தமிழாய்வுத்துறை.**

**http://www.trinitycollegenkl.edu.in/**

## இக்கால இலக்கியம்

காலங்கள்தோறும் இலக்கியங்கள் தோன்றுகின்றன. முற்காலத்தில் பல புலவர்களும், கவிஞர்களும் தோன்றி இறவா இலக்கியங்கள் படைத்தனர். அதைப் போல இக்காலத்திலும் சிறந்த புலவர்களும், கவிஞர்களும், எழுத்தாளர்களும், சிந்தனையாளர்களும் இருக்கின்றனர். இவர்கள் படைத்த படைப்புகளை இக்கால இலக்கியம் என்கிறோம்.

எஞ்சோட்டுப் பெண்” தமிழச்சியின் முதல் கவிதைத் தொகுப்பாக அமைகிறது. முற்றிலும் தன்னைச் சுற்றியே நகரும் இக் கவிதைகள் அப்பா, அம்மா, அப்பத்தா, தோழி, அக்கா, காமாச்சிப்பாட்டி, சிலம்பாயி, சேத்தூர் சித்தப்பா, சித்தி, முடியனூர்க்கிழவி, கொத்தனார் பாக்கியம், கச்சம்மா, கருப்பையா, குழந்தை வேல் ஆசாரி எனும் மனிதச்சித்திரங்களோடு தமக்கிருந்த அன்பை, அவர்கள் தம்மீது கொண்டிருந்த அன்பை கவிதையில் பரிமாறுகிறது.

கவிதையில் ஒவ்வொரு மனிதனும் மானுட ஈரத்தை நேசமாய் கசிவிப்பது என்னமோ அருவி நீரின் குளிர்ச்சியாய் உள்ளுணரச் செய்கின்றது. கவிதையில் உலாவும் மனிதர்கள் கல்வியின் மூலம் சூட்சுமங்களை கற்றுக் கொள்ளாத, மனதில் கபடமற்ற, உண்மையான அன்பை ஒளிரச் செய்பவர்களாக காட்சிப்படுகின்றனர். நெஞ்சில் ஈரம் கசியும் அந்த மனிதர்கள் குறித்த காட்சிப் படிமங்களின் வழியாக தமிழ்ச்சியின் மானுட ஈரமும் நம்மை கவர்கின்றன. இது ஒருநிலை.

வாழ்க்கை என்பது ஒவ்வொரு நாளும் புதிய புதிய உறவுகளால் நெய்யப்பட்டுக் கொண்டே இருப்பது. அதற்கு முடிவென்பது மரணமேயாகும். நெய்யப்படும் உறவின் இழைகளில் இருந்து நாம் பல நேரங்களில் மீள முடியாதபடிக்கு பின்னப்பட்டு விடுகிறோம். குறிப்பாக பிறந்து வளர்ந்த ஊர், அல்லது இளமையில் நெடுநாட்கள் ஒருவர் வாழ்ந்த நிலமும் அங்குள்ள பிற யாவும் ஒரு மனிதனை பெரிதும் வசீகரித்து விடுகிறது. பின்நாளில் பணிநிமித்தமாகவோ அல்லது பெண்ணைப் பொறுத்தமட்டில் மணமுடித்து இன்னொரு இடத்திற்கு குடிபுகும்போதோ நிகழும் இடமாற்றத்தாலோ ஏற்படும் நிலம் உள்ளிட்ட பிற மாற்றங்கள் யாவும் ஒரு மனிதனுக்கு இயல்பின் முரணாகத் தெரிகிறது.

எனவே மனம் இளமைக்காலத்தை நோக்கி விரைகிறது. அக்கால பழக்கவழக்கங்களோடு இக்கால பழக்கவழக்கங்களை ஒப்புமை செய்து பார்த்து புதிய வாழ்வை அங்கிகரிக்கத் தயங்குகிறது. பழமை நினைவுகளின் அடுக்குகளில் இருந்து மனம் பிரிய மறுக்கிற போது ஏற்படுகிற வலியிலும் கூட கவிதைகள் உள்ளிட்ட கலைப் படைப்புகள் பிறக்கின்றன. இதனை தமிழச்சி தன் கவிதைகளில் இப்படியாக பதிவு செய்கிறார்

வாழ்வியல், வட்டாரம், இனவரைவியல், புழங்கு பொருட்கள், பண்பாட்டுக்கூறுகள், நினைவுகள் என்பவைகளோடு முக்கியத்துவம் பெறுகின்றன. மேலும் மானுடம், மானுடத்தோடு தொடர்புடைய மேற்சுட்டிய பறவைகள், விலங்குகள், மரங்கள், பொருட்கள், உணவு, உணர்வு எனும் இவ் இருமையங்களும் தமிழச்சியின் கவிதைகளின் உயிர்சக்தியாக விளங்குபவை.

“பேருந்து இரைச்சலில்
செவிடாகவும்
தொலைக்காட்சிப் பெட்டிகளால்
அஜீரணித்தும்
கணிப்பொறி வடிவங்களில் முகம்
தொலைத்தும்
கூட்டுப்புழு வாழ்க்கையில்
முடமாகியும்
நகரத்தில் தொலைந்த என்னை
நடு இரவு உறக்கத்தில்
சிரிக்க வைத்து
மீண்டும் கண்டெடுக்கும்
சிறுவயதில் நான் சேகரித்த
தீப்பெட்டிப் பொன்வண்டாய்
என் பிறந்த ஊர் நினைவு” (எஞ்சோட்டுப்பெண், ப- 45)

உயிர்க் கோட்பாட்டை உயிர்த்துவமாக தமிழச்சியின் கவிதைகள் முன்மொழிகின்றன.

இத்தொகுப்பின் முத்தாய்ப்பான எஞ்சொட்டுப் பெண் கவிதை,

“எனக்காக வெல்லக்கட்டிகள்
முடிந்தே இருக்கின்ற
உன் சட்டைகள் இரண்டிலும்
நிரந்தரப் பழுப்புக்
கறை படிந்திருக்கும்” (எஞ்சோட்டுப்பெண், ப- 77)

# நன்றி.

http://www.trinitycollegenkl.edu.in/